# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-944/A/2024**

திரு.வீ.முருகேஷ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
மயிலாப்பூர் மண்டலம்,,
சென்னை-4.. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு. வீ.முருகேஷ், நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.S.சௌதா பீவி,<br>பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,<br>உணவுப்பொருள் வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 27.12.2023 |
| மனுதாரர், குடும்ப அட்டையில் பெயர் நீக்கம் குறித்த சில தகவல்களை 13 இனங்களில் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.01.2024 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 06.01.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | --- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 29.01.2024 |
| விசாரணை அழைப்பாணை நாள் | 02.04.2025 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தனது அண்ணன் திரு.மகேஷ்குமார், அவர் மனைவி திருமதி.காயத்ரி ஆகியோரின் பெயர்களை நீக்கம் செய்ய விண்ணப்பங்கள் அளித்ததாகவும், தான் அளித்த மனு

நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்து நிராகரிக்கப்பட்டதற்கான காரண விவரங்களை அளிக்குமாறு கோரினார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் திருமதி. S.சௌதா பீவி, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மயிலாப்பூர் மண்டலம், சென்னை-4 அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் ந.க.எண்.அ3/31/2024, நாள் 09.01.2024 என்ற கடிதத்தின் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கியதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரர் மனு செய்த நகலை வழங்கினால் அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

**4. இரு தரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்த பின் ஆணையம் மனுதாரர் விண்ணப்பித்த மனுவின் நகலினை பொதுத் தகவல் அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டார். அம்மனுவின் நகலினை பெற்ற பின் பொதுத் தகவல் அலுவலர் அதன் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரரின் பிரதான கோரிக்கையான குடும்ப அட்டையில் பெயர் நீக்கம் செய்வது தொடர்பான கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பொதுத் தகவல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.**

5. மனுதாரரின் தகவல் கோரும் பிரிவு 6(1)-ன் கீழான மனு, பொதுத் தகவல் அலுவலரின் வாதுரை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், **மனுதாரர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்கியுள்ளதாக ஆணையம் ஏற்று, இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-944/A/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
மயிலாப்பூர் மண்டலம்,
சென்னை-4.

**<u>மனுதாரர்</u>**
திரு. வீ.முருகேஷ்,
த/பெ.மா.வீரபத்திரன்
எண்.43/68, 2-வது குறுக்குத் தெரு,
தெற்கு கேசவ பெருமாள் புரம்,
பசுமை வழிச்சாலை, ஆர்.ஏ.புரம்,
சென்னை 600 028.

KRM/PA 09.04.2025